# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி05வெள்ளிக்கிழமை(21-08-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 228


# புலிகளின் 'பொம்மைக் குண்டு'கள் குறித்து பொலீஸ் தரப்பு எச்சரிக்கை!

## நாடெங்கும் வெடிக்க வைக்க திட்டமிட்டிருந்தனராம்

கொழும்பு, ஓகஸ்ட் 21

விளையாட்டுப் பொம்மைகளுக்குள் குண்டுகளை வைத்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வெடிக்க வைக்க விடுதலைப் புலிகள் வகுத்திருந்த திட்டத்தை தாம் கண்டு பிடித்துவிட்டதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான வெடிபொருள்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கபபட்டுள்ளது.

கொழும்பு பொலீஸ் தலைமை அலுவலகம் தெரிவித்த தகவலில் விடுதலைப் புலிகள் இந்தக்குண்டுகளை கொழும்பில் எதிர்வரும் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு வெடிக்க வைக்கத் திட்டமிட்டிருந்தார்கள் எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்த வகையான குண்டுகள் மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலையில் தயாரிக்கப் பட்டிருப்பதாகப் பொலீஸாருக்குத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## "தசபல" துருப்புக்களுடன் முனைக்காட்டில் மோதல்!

### நடவடிக்கை பூர்த்தி என தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக. 21

மட்டக்களப்பு மாவட்டம் முனைக்காடு பகுதியில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் நடத்தியமோட்டார் தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர், 8 படையினர் காயமடைந்தனர்.

கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்தில் படையினரால் ஆரம்பிக்கப்பட்ட 'தசபல' இராணுவ நடவடிக்கைத் துருப்பினருடனேயே இந்த மோதல் இடம் பெற்றது.

செவ்வாய் நள்ளிரவு ஆரம்பிக்கப்பட்ட இந்த மட்டுப் படுத்தப்பட்ட ராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக பூர்த்தி அடைந்துள்ளதாகவும்—

படையினர் அதே தினம் மாலை தமது முன்னைய நிலைகளுக்குத் திரும்பி விட்டனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

மச்சந்தி மௌனி



கப்பல், கப்பலாக வந்தால் போதுமா? ஏறினது இறங்க வேணுமே......!

## பிரிட்டிஷ் தூதர் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஓக. 21

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதர் டேவிற் ததாம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று யாழ். வந்த பிரிட்டிஷ்தூதர் இன்று பகல் 11-00 மணியளவில் யாழ். மாநகர சபைக்கு விஜயம் செய்வார்

யாழ். மாநகர முதல்வர் பொன். சிவபாலனைச் சந்தித்து அவர் கலந்துரையாடுவார்.

நேற்று யாழ் மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கத்தை அவர் சந்தித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## பக்தி பூர்வமாக நடந்த நல்லூர் தேர் உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 21

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா நேற்று பக்தி பூர்வமான முறையில் நடைபெற்றது.

குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டனர்.

காலை 6 மணிக்கு ஆரம்பமான வசந்த மண்டபப்பூசையைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராய் 7 மணிக்குத் தேரில் ஆரோகணித்தார்.

தேர் தெற்கு வீதியை அண்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 3 கப்பல்களில் பொருள்கள் ஏற்றப்படுகின்றன

கொழும்பு, ஓக. 21

யாழ். குடாநாட்டு மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல கொழும்புத் துறைமுகத்தில் ஒரே நேரத்தில் மூன்று கப்பல்களில் பொருள்கள் ஏற்றப்படுகின்றன.

''கிரிந்த'', ''ஹண்டி'', ''மாஹோ'' ஆகிய கப்பல்களிலேயே பொருள் ஏற்றும் பணி நடைபெறுகிறது.

பொருள் ஏற்றி முடியும் நிலையில் உள்ள 'கிரிந்த' கப்பல் எந்தநேரமும் வடக்கு நோக்கிப் புறப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# ஜனாதிபதி தேர்தலை டிசெம்பரில் நடத்துவதற்கு அமைச்சரவை முடிவு?

### ஆயத்தமாகும்படி ஜனாதிபதி கோருகின்றார்

கொழும்பு, ஓக. 21

ஜனாதிபதி தேர்தலை நவம்பருக்கு பின்னர் வருட இறுதியில் நடத்துவதென அமைச்சரவை முடிவு செய்துள்ளதாகத் தெரியவந்தது.

அமைச்சரவை நேற்று முன்தினம் ஜனாதிபதி தலைமையில் கூடிய சமயம் இது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாகவும் —

இதற்கான ஆயத்தங்களை செய்யுமாறு அமைச்சர்களை ஜனாதிபதி கேட்டுக் கொண்டதாகவும் — சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

அவசரகால விதிகளின் கீழ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிஸ்டல் குழு மன்னாரில் தாக்குதல்

### பொலீஸ் கான்ஸ்டபிள் பலி

யாழ்ப்பாணம், ஓக. 21

மன்னார் நகரில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணி அளவில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றொரு பொலீஸ் கான்ஸ்டபிள் காயம் அடைந்தார்.

தையல் கடை ஒன்றுக்குள் இந்த இரு பொலீஸாரும் நின்று கொண்டிருந்த சமயம் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் சுடப்பட்டதாக பலாலி இராணுவ தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயம் அடைந்த பொலீஸ் கான்ஸ்டபிள் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்

(இ-21)

## ஈ.பி.டி.பி. ஜனாதிபதி சந்திப்பு ஒத்திவைப்பு

தமிழ் மக்களின் பல்வேறு அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கும், ஈ. பி. டி. பி. அமைப்பின் தூதுக்குழுவுக்குமிடையில் நேற்று நடைபெற விருந்த பேச்சுக்கள் பின் போடப்பட்டுள்ளன.

மிக விரைவில் இப்பேச்சுக்கள் இடம்பெறும் என்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ செல்வம் நேற்று பதவி ஏற்பு

கொழும்பு, ஓக. 21

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக ரெலோ அமைப்பின் முன்னாள் செயலதிபர் அமிர்தநாதன் அடைக்கலநாதன் (செல்வம்) நேற்றுக் காலை 9. 25 மணிக்கு சபாநாயகர் கே. பி. ரட்ணாயக்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து குண்டு வெடிப்பில் உயிரிழந்த எஸ். சண்முகநாதனின் இடத்துக்கே இவர் பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினராகத் தாம் பதவியேற்ற போதும், வடக்கு-கிழக்கில் வாழும் சகல தமிழ் மக்களுக்கும் தாம் சேவையாற்ற இருப்பதாகவும் தமதுசேவை சகலருக்கும் கிடைக்கும் என்றும் அவர் பதவியேற்ற பின்னர் உதயனுக்குத் தெரிவித்தார்.

(இ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர்மீனவரின்வறுமைநிலையை நீக்குமாறு அரச அதிபருக்கு மகஜர்

## இரு வாரங்கள் கடற்றொழிலுக்கு செல்லவில்லை

குருநகர், ஓக. 21

கடந்த இரு வாரங்களாக கடற்றொழிலுக்குச் செல்ல முடியாதிருக்கும் குருநகர் மீனவர்களின் வறுமை நிலையைப் போக்க இரண்டு வார விசேட நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்று நேற்று யாழ். அரச அதிபரிடம் குருநகர் சன சமூக நிலையங்களின் இணையத்தினால் ஒப்படைக்கப்பட்டது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குருநகர் கிராம சேவையாளர் பிரிவுகளான ஜே 69, ஜே 68, ஜே 70, ஜே 71, ஜே 72 ஆகியவற்றைச் சேர்ந்த மக்களுக்காக தற்போது செயலகத்தினால் வழங்கப்பட்ட உணவு முத்திரைகள் போதாமலுள்ளன.

வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்கள் உணவு முத்திரையைப் பெறமுடியாதுள்ளார்கள். ஜே 68, ஜே 69 கிராம சேவகர் பிரிவுகளில் 1,560க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இதில் அனேக குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருபவை.

தங்களால் வழங்கப்பட்டுள்ள உணவு முத்திரைகள் உணவு முத்திரை பெறத் தகுதியானவர்களுக்குக் கூட உணவு முத்திரை வழங்கப் போதாமலுள்ளமையால் இவர்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கி உள்ளார்கள்.

தற்போது மீனவர்கள் கடந்த இரு வாரங்களாகத் தொழிலுக்குச் செல்லவில்லை. அப்படித் தொழிலுக்குச் சென்றாலும் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களில் மட்டுப்படுத்தப்பட்ட நேரம் மட்டுமே மீன்பிடிக்கிறார்கள் போதிய கடல் எல்லை தொழில் செய்வதற்காக விஸ்தரிக்கப்படவில்லை. இதனால் சிறிய அளவிலேயே வருமானம் கிடைக்கிறது. எனவே உணவு முத்திரை சகலருக்கும் வழங்கப்பட வேண்டும்.

இப்படி மகஜரில் கோரப்பட்டுள்ளது. (இ-51)

---

**லிபேட்டி தியேட்டர்**

அச்சுவேலி.

சனிக்கிழமை வரை

விஜய், சுவலட்சுமி, சார்லி, சங்கவி நடித்த

**நிலாவே வா**

(புதிய வெளியீடு)

ஞாயிறு முதல்

அஜித்குமார், கார்த்திக் ரோஜா, மணிவண்ணன்

**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**

(புத்தம் புதிய வெளியீடு)

நேரம்:- 10-30, 2-30

(பழைய நேரம்)

Tele. No. 070-212223

(58486)

---

**நாகம்ஸ் சினிமா**

சுன்னாகம்

2 ஆவது வெற்றி வாரமாக

சுப்பர் ஸ்ரார் ரஜனி நக்மா நடித்த

**பாட்ஷா**

திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.

காட்சிகள்:- 10-30, 2-30

(58386)

---

உ

மாவை கொல்லங்கலட்டி

**ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்**

**விநாயக சதுர்த்தி விஞ்ஞாபனம்**

25-08-1998 செவ்வாய்க்கிழமை விநாயக சதுர்த்தி உற்சவம் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும். பக்தர்கள் தெல்லிப்பழை தடை முகாமுக்கு வந்து பஸ் மூலம் கோயிலுக்கு வர வேண்டிய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அனைவரும் திரண்டு வந்து பிள்ளையாரி அருள் பெறுவீர்களாக.

சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்

அறங்காவலர்

(58541)

---

**ராஜா டாக்கீஸ்**

யாழ்ப்பாணம்.

இறுதி வாரமாக

சிவாஜி - ராதா ஜனகராஜ்-வடிவுக்கரசி சத்தியராஜ் நடித்த

**முதல் மரியாதை**

25-08-98 முதல்

ரஜனி, மீனா சரத்பாபு நடித்த

**முத்து**

10-30 — 2-00, 5-00

(புதிய நேரம்)

(சி/4560)

(சி/4574)

---

**A/L 99**

பொருளியல்

ஓ.வரதராஜன்

பகுதி II

பணமும் வங்கியும்

ஆரம்பம்:- 22-08-98

பிரிவு I 9-00 — 10-00 a.m.

பிரிவு II 10-00—11-00 a.m.

**பொருளியல் கல்லூரி**

நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.

(58540)

---

**10 ஆம் நாள் இதய அஞ்சலி**

வித்யா சாகரம் நியாய சிரோமணி

பிரம்மஸ்ரீ

**கி.சுப்பிரமணியசாஸ்திரிகள்**

'கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக'

என்ற வள்ளுவரின் வாக்குக்கமைய ஐயந்திரிபுறக் கற்று ஒழுக்கம், ஆசாரம், அன்புடைமை ஆகிய நற்பண்புகளுடன் வாழ்ந்து இறைபதமெய்திய அன்னாரின் மறைவு குடும்பத்தாருக்கு மட்டுமல்லாமல் எமக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இ, சுப்பிரமணியக் குருக்கள்

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்.

அரியாலை.

(சி/4625)

---

**9 ஆம் ஆண்டு நினைவலைகள்**

| | | |
|---|---|---|
| கதிர்காமத்தம்பி இரவீந்திரதாஸ் (ரவி) | கதிர்காமத்தம்பி இராதாகிருஷ்ணன் (கண்ணன்) | நாகமணி தில்லைநாதன் (நாதன்) |
| மலர்வு: 14-01-1958 | மலர்வு: 22-03-1962 | மலர்வு: 30-03-1959 |
| உதிர்வு: 21-08-1989 | உதிர்வு: 21-08-1989 | உதிர்வு: 21-08-1989 |

திதி: 10 - 09 - 1998

ஆண்டு ஒன்பதென்ன
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சங்களில் என்றும் வாழ்வீர்கள்!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

-- குடும்பத்தினர்

வத்தனை, புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(58539)

---

**சமய நிகழ்ச்சிகள்**

யாழ்ப்பாணம், ஓக. 21

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

அடுத்தமாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ஐ-173)

## விதவைகளுக்கு உதவித் திட்டம்

மூளாய், ஓக. 21

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் விதவைகளுக்கான உதவித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு ''யுனிசெவ்'' நிறுவனம் முன்வந்துள்ளது.

கடந்த காலவன் செயல் காரணமாக விதவைகளாகிய பெண்கள் கிராமரீதியாகத் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் இந்த உதவித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ஐ-99)

---

# மரண அறிவித்தல்கள்

**திருமதி கனகம்மா நடராசா**

(வடலியடைப்பு)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா நடராசா அவர்கள் 20-08-98 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர் நடராசா (உரிமையாளர்; எலற்றிக் ஸ்ருடியோ, வடலியடைப்பு) அவர்களின் அன்பு மனைவியும், காசிப்பிள்ளை வேதாம்பாள் ஆகியோரின் அன்பு மகளும், திருமதி தங்கரத்தினம் சண்முகநாதன் அவர்களின் சகோதரியும், சரோஜினி தேவி, சுலோசனாதேவி, கருணாகரன் (படவரைஞர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), மீராதேவி (தட்டெழுத்தாளர், பல நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அப்புத்துரை (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம்), நித்தியானந்தன் (இயந்திர இயக்குநர், நீர்ப்பாசனத் திணைக்களம், ஒட்டிசுட்டான்) ஆகியோரின் அன்பு மாமியும், செந்தூரன் (மாணவன், உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்), சுபாகரன், சுதர்சினி (மாணவர்கள், கொக்குவில் இந்துக் கல்லூரி), முகுந்தன் (மாணவன், இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு), கரன் (மாணவன், யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21-08-98) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 1-00 மணியளவில் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
ந கருணாகரன்
(மகன்)

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(58538)

---

**கந்தையா மயில்வாகனம்**

(இளைப்பாறிய புகையிரத கங்காணி)

கல்முனையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மயில்வாகனம் அவர்கள் 20-08-98 நேற்று காலமானார்.

இவர் நேசரத்தினத்தின் அன்புக் கணவரும், அமிர்தலிங்கம் (C. T. B), அரியமலர், அரியநாயகம் (புலோலி ப. நோ. கூ. ச.), புவநேந்திரன் (கனடா), புவனேஸ்வரி, பாலகிஸ்ணன் (கனடா), பிரபாகரன், பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கமணி, சிவானந்தராஜா, மனோகரன், உருத்திராதேவி, யோகேஸ்வரி, சுகந்தமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 22-08-98 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல்மட்டுவில்கொட்டடிதாவு இந்துமயானத்தில தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. அமிர்தலிங்கம்
(மகன்)

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம் (சிவன் கோயிலடி),
சாவகச்சேரி.

(சி/4626)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க தூதரகம் மீதான தாக்குதல்:

# கென்ய ஹோட்டேல் ஒன்றில் வைத்து 800 கிலோ குண்டு தயாரிக்கப்பட்டது?

நைரோபி, ஓக. 21

நைரோபியில் உள்ள அமெரிக்கத் தூதரகக் கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டுவரும் கென்ய பொலீஸாரும், அமெரிக்காவின் சமஷ்டி புலனாய்வுப் பிரிவினரும் (எவ். பி. ஐ.) கென்யாவில் உள்ள ஹொட்டேல் ஒன்றை சோதனையிட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட பலஸ்தீனிய பிரஜையான முஹமட்சாதீக் ஒடே என்பவர் வழங்கிய தகவலை அடுத்தே இச் ஹோட்டேல் முற்றுகையிடப்பட்டது.

இந்த ஹொட்டேலில் உள்ள அறை ஒன்றில் வைத்தே சுமார் 800 கிலோ நிறையுள்ள குண்டு தயாரிக்கப்பட்டதாக அந்த சந்தேக நபர் கூறியுள்ளார் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

அமெரிக்க அதிகாரிகள் ஹோட்டேல் அறையில் பல்வேறு தடயவியல் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இந்த பலஸ்தீன சந்தேக நபர் குண்டு வெடிப்பு இடம் பெற்ற தினத்தன்று யேமன் கடவுச் சீட்டுடன் கராச்சி விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் அங்கிருந்து கென்ய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டார்.

இவரது சகாக்கள் மூவர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்து விட்டதாகவும், ஏனைய இருவர் தலைமறைவாகியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஐ)

## ஆப்கனுக்கு தப்ப முயன்ற மேலும் மூவர் கைதாகினர்

இஸ்லாமாபாத், ஓக. 21

கிழக்கு ஆபிரிக்காவில் அமெரிக்கத் தூதரகங்கள் மீது குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக மேலும் இரு சந்தேக நபர்கள் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் இருந்து ஆப்கானிஸ்தானுக்குள் நுழைய முயன்றபோதே இருவரும் கைது செய்யப்பட்டதாக இஸ்லாமாபாத்தில் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் வைத்து ஏற்கனவே கைது செய்யப்பட்ட பலஸ்தீனிய சந்தேக நபரான முஹமட் சாதீக் கொடுத்த தகவலே இவர்களைக் கைது செய்ய உதவியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாட்டரிசி, சீனி பங்கீட்டுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 21

உலர் உணவு முத்திரை வைத்திருப்போர் தவிர்ந்த ஏனைய அ, இ, உ பங்கீட்டு அட்டைகளை உடைய குடும்பம் ஒன்றிற்கு 5 கிலோ சிவப்புநாட்டரிசியும், 3கிலோ சீனியும் ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக வழங்குவதற்கான நடவடிக்கையை யாழ். செயலகம் மேற்கொண்டுள்ளது.

புதன் தொடக்கம் இந்த விநியோகத்தை மேற்கொள்ளுமாறு ப. நோ. கூ. சங்கங்களுக்கு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பணிப்புரை வழங்கினார்.

செயற்கையாக ஏற்படுத்தப்பட்டுள்ள உணவுப் பொருள் தட்டுப்பாட்டை முறியடிக்கும் நோக்குடனும் பதுக்கல் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் இந்த விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்பொழுது முதலாம் கட்டமாக நடைபெறும் சீனி, அரிசி விநியோகம் முடிவடைந்ததும் தொடர்ந்து இவ்வாறான விநியோகம் யாழ். செயலகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ். செயலக உணவுக் களஞ்சியத்தில் போதியளவு உணவுப் பொருள்கள் கையிருப்பிலிருப்பதால் இந்த உணவுவிநியோகம் தொடர்ந்தும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## யெகோவா மாநாடு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 21

யெகோவாவின் சாட்சிகளினது மாவட்ட மாநாடு இன்று 21 ஆம் திகதி முதல் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் தினமும் காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

கடவுள் காட்டும் ஜீவவழி என்னும் பொருளில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

''பெற்றோரே! உங்களுடைய பிள்ளைகளின் மனதில் கடவுளின் வழியைப் பதிய வையுங்கள்'' மற்றும் ''கிறிஸ்துவின் மீட்கும் பொருள் இரட்சிப்புக்கான கடவுளின்வழி'', ''குடும்பங்களே! அன்றாடம் பைபிள் வாசிப்பை உங்கள் வாழ்க்கை முறை ஆக்குங்கள்'' என்ற பொருள்களிலான பேச்சு மற்றும் வேதாகம நாடகம் என்பன மாநாட்டின் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறவுள்ளன. (இ-7)

---

## தசாக கிருஹயக்ஞம்

அன்புடையீர்!

வெகுதானிய ஹு ஆடி மீ 28 (13–08–1998)
வியாழக்கிழமை சிவபதமடைந்த

### பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

ஆவணி 06 (22-08-98) சனிக்கிழமை
காலை 10 மணி தசாகம்

ஆவணி 07 (23-08-98) ஞாயிற்றுக்கிழமை
காலை 8 மணி விருஷோத்சர்ஜனம்
ஏகோதிஷ்டம், மாசியம்

ஆவணி 08 (24-08-98) திங்கட்கிழமை
காலை 10 மணி சபிண்டீகரணம்

ஆவணி 09 (25-08-98) செவ்வாய்க்கிழமை
காலை 10 மணி கிருஹயக்ஞம்

உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள், மாணவர்கள், அபிமானிகள் யாவரையும் அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

- குடும்பத்தினர்

33/1, கடைச்சாமி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (58481)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 | 22 |
| 11 | 07 |
| 1927 | 1998 |

சிவநெறிப்புலவர்

### கலாநிதி க. கனகராசா (J. P)

நீங்கள் அணைந்தாலும் உங்கள்
நினைவலைகள் அணையவில்லை!

மில்க்வைற் குடும்பத்தினர்

'திருவாலவாய்'
யாழ்ப்பாணம். (சி/ 4620)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

எமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரும்
சங்க முன்னேற்றத்திற்காக பலவழிகளிலும்
தொண்டாற்றியவருமான நண்பர்

### அமரர் கலாநிதி க. கனகராசா J. P.

அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!

ஊனமுற்றோர்
புனர்வாழ்வுச் சங்கம்
15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (58496)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

சிவதர்ம வள்ளல்

### அமரர் கனகராசா J. P.

அவர்களின் திருவடிக்கு
**எமது கண்ணீர்க் காணிக்கை!**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

மனிதாபிமானம், சமுதாய நேயம், தூய சைவ வாழ்வு, சமுதாய சேவை அனைத்தையும் தன்னகத்தே கொண்ட 'சிவதர்ம வள்ளல்' அமரர் க. கனகராசா அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்பாள் சனசமூக நிலையம்,
மாரியம்மன் ஆலய பரிபாலன சபை,
சுதுமலை தெற்கு,
ஆனைக்கோட்டை. (58523)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மில்க்வைற் உரிமையாளர்

### க. கனகராசா

அவர்களின் தேகவியோகங் குறித்து
அளவெட்டி கும்பழாவளைப்பதி

### விநாயகர் தொண்டர்சபை

வழங்கிய
இரங்கல் நுதலிய பரிநிலை வாழ்த்து

அகவற்பா

மலர்தனை உலகின் மல்கிருள் ஒட்டும்
பலர்புகழ் ஞாயிறு பட்ட தென்கோ
கற்பகப் பூங்கா கால் காய்ந் தென்கோ
மடிந்த கனக ராசனை நினைந்தே
உள்ள வள்ள லிவரென வாழ்ந்து
பல்லோர் நெஞ்சும் பணித்த சீலன்
சொல்லே ருழவன் சொற்றடு மாற
நல்லுதவி பெற்றோர் நாற்றடு மாற
சேயினை இழந்த தாய்பது மான
அவலங் கொள்ளாராருள ரீங்கினி
கும்பழாவளை குஞ்சர முகத்துக்
கொம்பன் தொண்டர் நாமும் மறுகினர்
அன்னவர் நமக்கு அமைந்த சீருடை
முன்னம் வழங்கிய முதல்வன் போயினன்
அன்னவன் ஆலயப் பணிக்கென ஆற்றிய
கொடைகள் பற்பல கோதறு மன்பர்
கிடைக்கப் பெற்றா ரெனநனி மகிழ்வுழி
நீத்த செய்தி எம்மை எல்லாம்
யீர்த்து வருந்திய திதுவுல கியல்பே


செ. நம்பியாரூரர்
தலைவர்

தி. திருச்செந்தூரன்
செயலாளர்

(58527)

---

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 | 20 |
| 07 | 08 |
| 1947 | 1990 |

அமரர்

### கந்தையா ரவீந்திரன்

திதி: 21–08–1998

காலங்கள் கரைந்தாலும் கண்மணியே நின் நினைவலைகள் என்றும் அழியாதவை! நின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சும் உள்ளங்கள்

குடும்பத்தினர்

வேலணை-01. (58526)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

புதிதாக வீடியோப்படப் பிரதிகள் வாடகைக்கு விட விரும்புவோருக்கு உகந்த, நல்லநிலையில் உள்ள புத்தம் புதிய மாஸ்ரர் வீடியோப் படப்பிரதிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: மா. சிவமூர்த்தி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. [58476]

### வீடுகள் விற்பனைக்கு

நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அண்மையில் கச்சேரி நல்லூர் றோட், நாயன்மார் வீதியில் அமைந்துள்ள மின்சாரம், குழாய் நீர் முதலிய சகல வசதிகளும் உடைய விசாலமான வீடும், அருகிலுள்ள சிறிய வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. இரத்தினதுரை, 29, நாயன்மார் வீதி, நல்லூர். (58454)

### தேவை

மெல்லவந்து தோட்ட பராமரிப்பு அனுபவமுள்ள 2 குடும்பங்கள் பளையில் உள்ள தோட்டத்திற்கு உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: செ. த்மநாதன், 26, சீனிவாசகம் வீதி யாழ்ப்பாணம். (58468)

### மணமகள் தேவை

யாழ். சச்சேரி நல்லூர் வீதியில் வசிக்கும் 31 வயதுடைய, றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தில் பணியாற்றும், நற்பண்புடைய மணமகனுக்கு மணமகள் தேவை. முகவரி: திருமதி த. குலோத்துங்கம், இல. 3, மூகததவி நாயகர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி. (58501)


## கந்தர் அலங்காரம் வெளியீடு

கொழும்புத்துறை, ஓக 21

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினரின் ஆசரவில் 'கந்தரலங்காரம்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் நல்லூர் சிவன் கோயில் முன்பாகவுள்ள பேரவைக் காரியாலயத்தில் பேரவையின் தலைவர் வே. கெ தனபாலன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பேரவையின் பிரசாரக் குழுவைச் சேர்ந்த த தர் மேந்திர நூலின் தத்துவங்களை எடுத்துரைத்தார். (ஐ-30)

## 300 குடும்பங்கள் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் நீதிமன்றங்கள் இயங்காமையினால் குடும்பத்தலைவர்களிடமிருந்து பராமரிப்புப் பணம் பெற்று வந்த 300 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, மல்லாகம், யாழ்ப்பாணம், ஆகிய நீதிமன்றங்கள் இயங்கி வந்த காலத்தில் இந்த நீதிமன்றங்களின் மூலம் எடுக்கப்பட்ட விவாகரத்து வழக்குகள் மூலம் சுமார் 300 குடும்பங்களுக்கு தாபரிப்புப் பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டு வந்தது.

கடந்த சில மாதங்களாக நீதிமன்றங்கள் இயங்காமையினால் தாபரிப்புப் பணம் கட்டுபவர்கள் கட்டாமல் விட்டு விட்டார்கள். இதனால் தாபரிப்புப் பணம் பெற்றுவந்த குடும்பங்கள் உணவு மற்றும் தமது அத்தியாவசிய தேவைகளுக்கான பண உதவியின்றிப் பெரும் கஷ்டநிலையை எதிர்நோக்கியுள்ளனர். (ஐ-5)


## ரஷ்யாவில் உயர் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற

**லூமும்பா பல்கலைக்கழகம்**

போன்ற பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களில் நீங்கள் விரும்பிய எல்லாத்துறைகளுக்கும் அனுமதி பெற்றுத்தரப்படும். கட்டணம் எதுவுமில்லை.

1. மருத்துவம் (ஆங்கிலம்)
2. பொறியியல் (ஆங்கிலம்)
3. ஏனைய துறைகள்

விண்ணப்ப முடிவு திகதி: 30-08-98

Dr. க. சிவனடியான்,
நவாலி தெற்கு,
மானிப்பாய். (58491)

## யா\சாவகச்சேரி- இந்துக்கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

**கணனிப் பயிற்சி நெறி**

(டிப்ளோமா - தரம்)

- ★ குறைந்த கட்டணம்
- ★ அனுபவமிக்க ஆசிரியர்கள்
- ★ போதிய செய்முறை/ விரிவுரை வகுப்புக்கள்

வெகு விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

மேலதிக விவரங்கள் / விண்ணப்பப்படிவம் என்பனவற்றினை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (58499)


## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 – 06 – 1933 | 20 – 08 – 1990 |

தொலகட்டி வயாவிளான்

அமரர்

### வைமித்திலிங்கம் நடராசா

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி, அச்சுவேலி)

திதி: 21 - 08 - 1998

அன்பு அப்பாவே!
ஆண்டுகள் எட்டு ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் பாசங்கள் எங்களை விட்டு அகலாது! என்றும் கந்தன் திருத்தத்தில் உங்கள் ஆத்மா சாந்தியடைய அஞ்சலி செலுத்தும்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அரசடி, 4 ஆம் ஒழுங்கை,
கந்தர்மடம். (58524)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 – 02 – 1931 | 01 – 08 – 1997 |

### அமரர் குமரேசு வீரவாகு

(முன்னாள் கிளை முகாமையாளர், கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்)

திதி: 21-08-1998

பாசத்தின் உறைவிடமாய் இருந்து எங்களை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி எய்திய அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

இந்திரம்மன் கோயிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (58506)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



செல்வி

### திருக்குமாரன் திருலஸ்ரீ

(செல்வா)

(இராமநாதன் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 – 10 – 78 | 11 – 09 – 96 |

திதி: 21 – 08 – 1998

எம் இனிய மகள் செல்வாவே!
நாம் வாழ்ந்த கூடுகலைந்து
வருடம் இரண்டானதம்மா
எம்துயர் மாறாது என்றும்
நின் நினைவுகளோடும் உணர்வுகளோடும்
கலந்து வாழும்!

அப்பா, அம்மா,
தம்பிமார்.

பரமானந்த அவென்யூ,
இணுவில் மேற்கு. (58526)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 – 02 – 1917 | 22 – 07 – 1998 |

அமரர்

### வைரமுத்து ஆசைப்பிள்ளை

22-07-1998 அன்று காலமான எமது அன்புத் தந்தையின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும், ஆறுதல் கடிதம் அனுப்பியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (21-08-1998) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அவரின் ஆத்மசாந்திக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மாளிசந்தி,
அல்வாய் தெற்கு. (சி/4596)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி ஆலயம்
## தொண்டமனாறு

1. செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பரவுகடை, இனிப்புக்கடை மற்றும் வேறு கடைகளுக்கான பகிரங்க ஏலம் 21 - 08 - 1998 அன்று காலை எட்டு மணிக்கு ஆலயத்தில் நடைபெறும்.
2. வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் நகர சபையின் விற்பனை அனுமதியைப் பெற்று வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டும்.
3. முருகன் அடியார்களுக்கு தினமும் 11-00 மணியிலிருந்து 2-00 மணிவரையும் அன்னதானம் வழங்கப்படும். அன்னதானம் வழங்க விரும்பும் அடியார்கள் மேலதிக விவரத்திற்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

திருவிழா சம்பந்தமாகவும், கோயில் கைங்கரியங்கள் பற்றிய விவரங்களுக்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

பிரதமகுரு சிவஸ்ரீ ச. கந்தசாமி ஐயர்
உலககுருநாத ஐயர்
பிரதமகுரு
ஆலய உரிமையாளர்
செல்வச்சந்நிதி தொண்டமனாறு

(58511)

# தேசாபிமானி ஐயாவுக்கு அஞ்சலிகள்

நீதி நெறிகளைப் பரப்பி நின்று
நில மகளை நித்தம் பசுமையாக்கி
அறப்பணிகளும் சிவப்பணிகளுமாய்
வாழ்ந்த தேசாபிமானி ஐயாவுக்கு
முப்பத்தோராம் நாள் அஞ்சலிகள்!

கிளை:

கங்கா போட்டோ, மீசாலை.
கங்கா போட்டோ, கோண்டாவில்.

(58508)

# இலங்கை மின்சார சபை
## முக்கிய அறிவித்தல்

காங்கேசன்துறை, சுன்னாகம் ஆகிய இடங்களிலுள்ள மின் நிலையங்களில் அமைந்துள்ள மின் பிறப்பாக்கிகளில் இருந்து மின் வலு உற்பத்தி செய்து உயர் அழுத்த மின் மார்க்கங்களினூடாக வலிகாமப் பகுதி முழுவதற்கும் பரீட்சார்த்தமாக மின்சாரம் செலுத்தப்படவிருக்கின்றது. கடந்த பல வருட காலமாக மின்சாரம் செலுத்தப்படாமல் இருந்த மின் மார்க்கங்களில் பொதுமக்கள் பல்வேறு காரணங்களுக்குமாக ஏறுவதும், அம்மார்க்கங்களின் கம்பங்களைப் பல வேறு தேவைகளுக்குப் பாவிப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தற்போது இரவு நேரங்களில் மட்டும் மின்சாரம் செலுத்தப்பட்டு வந்த தாழ் அமுக்க மின் மார்க்கங்களிலும் பொது மக்கள் பல்வேறு காரணங்களுக்காக ஏறுவதும் அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. மேற்படி பரீட்சார்த்த மின் உற்பத்திக் காலங்களில் இரவு, பகல் வேறுபாடின்றி உயர் அழுத்த, தாழ் அமுக்க மின் மார்க்கங்களில் மின்சாரம் செலுத்தப்பட்டுப் பரீட்சிக்கப்படும்.

இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கையானது காங்கேசன்துறையில் இருந்து சுன்னாகம் வரையும், சுன்னாகத்தில் இருந்து பரமேஸ்வராக் கல்லூரி வரையும், சுன்னாகத்தில் இருந்து கந்தரோடை, சங்கானை ஊடாகப் பொன்னாலை வரையும், சுன்னாகத்தில் இருந்து காங்கேசன்துறை — யாழ்ப்பாணம் வீதியில் யாழ்ப்பாணம் வரையும், பரமேஸ்வராக் கல்லூரியில் இருந்து பலாலி வீதி வழியாக யாழ். மின்சார நிலையம் வரையிலும், திருநெல்வேலி மருந்துவக் கல்லூரியில் இருந்து கல்வியங்காடு வரையும், பரமேஸ்வராக் கல்லூரியிலிருந்து பிறவுண் வீதி, அரசடி வீதி, கே.கே.எஸ். வீதி ஊடாக மனோகராத் தியேட்டர் வரையும் உள்ள உயர் அழுத்த மின் மார்க்கங்களிலும் இதனை அண்டிய சகல தாழ் அமுக்க மின் மார்க்கங்களிலும் தீண்டுதலைப் பொது மக்கள் 21-08-1998 வெள்ளிக்கிழமை முதல் தவிர்த்துக் கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். எமது அறிவுறுத்தலை உதாசீனம் செய்து மேற்படி மின் மார்க்கங்களில் ஏற்படுத்தக்கூடிய தொடர்புகளால் ஏற்படக்கூடிய எந்தவிதமான பாதிப்புக்களுக்கும் இலங்கை மின்சார சபை எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

பிரதி பொது முகாமையாளர்
(வடக்கு)
இலங்கை மின்சார சபை
யாழ்ப்பாணம்.

(சி/4612)

# வானொலியில் அஞ்சல்

யாழ்ப்பாணம், ஓக. 21

நல்லூர் கந்தசுவாமி கோவில் தீர்த்த உற்சவத்தையும், பூங்காவன உற்சவத்தையும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் நேரடியாக அஞ்சல் செய்யவுள்ளது.

இன்று காலை 7 மணிமுதல் 9 மணிவரை தீர்த்த உற்சவ நிகழ்வுகள் தமிழ்ச்சேவையில் அஞ்சல் செய்யப்படும்.

நாளை மாலை 3 மணி முதல் 5 மணிவரை பூங்காவன நிகழ்ச்சிகள் அஞ்சலாகும். (ஐ)

# இல்ல விளையாட்டுப் போட்டி

வலி. வடக்கு, ஓக. 21

ஏழாலை மயிலங்காடு ஞானகலா முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இ. குணபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் ஆ. மகாலிங்கமும், சிறப்பு விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி. கிருஷ்ணசாமி சர்வோதய வெளிக்கள இயக்குநர் ந. சங்கரப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-86)

# விவரம் சேகரிப்பு

வலிமேற்கு, ஓக. 21

வலிகாமம் மேற்குப்பிரதேச செயலர் பிரிவில் கடந்த கால வன்செயல்களின் போது விதவையானவர்கள், ஊனமுற்றவர்கள், உயிரிழந்தவர்கள், அநாதையானவர்கள், மிதிவெடியினால் ஊனமுற்றவர்கள், உயிரிழந்தவர்கள் ஆகியோரின் விவரங்கள் திரட்டப்படுகின்றன. (ஐ-173)

# பிரதேச செயலக கட்டடத்துக்கு அடிக்கல்

வலிமேற்கு, ஓக. 21

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இக்கட்டடத்துக்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் அன்று முற்பகல் 11 மணிக்கு நாட்டி வைப்பார்.

சங்கானை பொதுச்சந்தைக்கு அருகில் புதிய செயலகம் அமைக்கப்படவுள்ளது. அடிக்கல் நாட்டு வைபவம் பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் நடைபெறும். (ஐ-173)

# லங்காமுடித வருகிறது

யாழ்ப்பாணம், ஓக. 21

அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு 'லங்காமுடித' கப்பல் விரைவில் காங்கேசன்துறைக்கு வரவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இக் கப்பலில் அரிசி, சீனி, மா, பருப்பு உட்பட யாழ். செயலகத்துக்கு உரிய பல பொருள்கள் எடுத்து வரப்படவுள்ளன.

இதேவேளை தனியார் நிறுவனங்களுக்கும் பல பொருள்கள் [illegible] கொண்டுவரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5-173)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டியும், சபிண்டீகரண அழைப்பும்



மண்ணில் 02 — 04 — 1939
விண்ணில் 23 — 07 — 1998

திருமதி
**சிவாலிங்கம் தங்கேஸ்வரியம்மா**
( கட்டடக் கலைஞர் )

ஆறாத் துயரில் மாதம் ஒன்று ஆனாலும்
அன்னையே உன் நினைவு ஆறவில்லை.
மீளாத் துயில் கொண்ட பாசக் குலவிளக்கே — உமை
ஆறாத் துயருடன் உன் ஆத்மா
இறையடியில் இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.


அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் இவ் வேளையில் நாளை ( 22 - 08 - 98 ) நடைபெற இருக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நெற்கொழு,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

( C / 4617 )

# ஓராண்டு நினைவஞ்சலி
21 - 08 - 1998



அமரர்
**சின்னப்பு கனகரட்ணம்**

மலர்வு 18 - 12 - 1952
மறைவு 03 - 08 - 1997

எம் இனிய தெய்வம்— அப்பா!
நீங்கள் எங்களை பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ?
காலமெல்லாம் எமக்குத் துணையாவீர்கள் என்றே
கனவு கண்டோம் அப்பா!
கனவெல்லாம் கானல்நீராய் போனதன் மர்மமென்ன?
ஏற்றமுடன் பலர் வாழ்வு நிலைத்திடவே
பொழுதெல்லாம் உழைத்தீர்களே — அப்பா!
இன்று சித்திரமாய் பார்க்கும்படி விட்டு விட்டு
விண்ணிலே கலந்ததும் கண்ணிலே அருவியாய்
நீர் பாய வாழ்கின்றோம் — அப்பா!
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் தான்
சென்றாலும் ஆறாது எம் துயரமப்பா!
நிலையான வாழ்வு தேடிச்சென்ற எம் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல—
இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.

(C/4605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

இந்து மதத்துக்கும், இந்துக் குருமாருக்கும், இந்து சமுதாயத்துக்கும் தமது மனம், வாக்கு, காயம் ஆகிய வற்றால் அளப்பரிய தொண்டாற்றி மறைந்த
எனது குருவான

## பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்

அவர்கட்கு

இதயத்தாலும், பக்தியாலும் நிரம்பிய புஷ்பாஞ் சலியைப் பாதார விந்தங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

அவர் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்க்கும், ஏனை யோர்க்கும் சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாய கர் ஆறுதல் அளிப்பாராக.

சோழியூரான் - பிறைசூடிக்குரு
( பழைய மாணவன், சிவானந்த குருகுலம் )
ஈசுரவிநாயகர் தேவஸ்தானம்
பறாளாய், சுழிபுரம்.

(58504)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
19 — 08 — 1931



மறைவு
22 — 07 — 1998

**அமரர் நாகலிங்கம் அருமைநாயகம்**

''வையத்து வாழ் வாங்கு வாழ்வான்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

அன்னாரை பாசமுடன் நினைவு கூரும்:

சகோதரர், சகோதரிமார்,
மைத்துனர், மைத்துனிமார்,
மக்கள், மருமக்கள்.

முத்துக் கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

(58512)

---

# வயாவிளான் ம. வி. தற்காலிக

# கொட்டகைகள் சரிந்து வீழ்ந்தன!

## வகுப்புகளை நடத்த முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஓக.21 இடம் பெயர்ந்த நிலையில் உரும்பராயில் இயங்கி வரும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலத்தின் வகுப்புகள் நடைபெறும் தற்காலிகக் கொட்டகைகள் மூன்று கடந்த வாரம் பெய்த மழையில் சரிந்து விழுந்துள்ளன.

இப்பாடசாலையின் ஏனைய கொட்டகைகளும் விரைவில் சரிந்துவிழும் நிலையிலேயே உள்ளன.

கடந்த எட்டு வருடங்களாக இடம்பெயர்ந்து இயங்கி வரும் இப்பாடசாலையின் அனைத்து வகுப்புகளும் பனந்தூண்கள் கொண்டு அமைக்கப்பட்ட தற்காலிகக் கொட்டகைகளிலேயே நடைபெற்று வருகின்றன.

பனந்தூண்களின் பாவனைக் காலம் சுமார் இரண்டு வருடங்களே. எனினும் இங்குள்ள வகுப்பறைகளின் பனம்தூண்கள் ஐந்து வருடங்களுக்கு மேலாக மாற்றப்படாமலேயே உள்ளன. இதன் காரணமாக அவை உக்கியதால் மூன்று கொட்டகைகள் சரிந்துள்ளன. ஏனையவையும் விரைவில்விழும்நிலையிலேயேயுள்ளன.

மூன்றாந்தவணைவிரைவில் ஆரம்பமாக இருப்பதால் இரண்டாம் தவணை விடுமுறையை நீடித்து வகுப்புக்கள் நடைபெறும் இக் கொட்டகைகளை புனரமைத்துத் தருமாறு பாடசாலை அதிபர் கல்விப்பணிப்பாளருக்கு அவசரக் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மாகாண கல்வியமைச்சு, கல்வித்திணைக்களம் ஆகியவற்றுக்கும் அரசாங்க அதிபருக்கும் முன்னரே அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பாடசாலை அதிபர் அ. நடராஜா தெரிவித்தார்.

(ஐ-6)

---

''சிவதர்ம வள்ளல்''

## அமரர் க. கனகராசா

அவர்களுக்கு

யாழ். இந்து சமூகத்தின்

## கண்ணீர் மலர்கள்

என்று மறப்போம்...
என்று நினைப்போம்...

பூமரங்கள், பழமரங்கள், நிழல் தருக்கள்,
மூலிகைத் தாவரங்கள்.... . மட்டுமல்ல......
நால்வர் படங்கள், சைவ அனுஷ்டான ஒழுங்கு
விதிகள், வித்தியாரம்ப அரிச்சுவடிகள்,
திருமுறைப்பதிகங்களின் பிரதிகள், சிந்தனைக்குரிய
நற்சிந்தனைகள்... இன்னும் பல உலகிற்குத்
தந்துதவிய கரங்கள் ஒய்ந்து விட்டன...

என்று நினைப்போம்...!
என்று மறப்போம்...!

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்...

''ஆடல் வல்லானின் பாதார விந்தங்களை அடையப்பெற்று அமைதிபெறப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், அலுவலக ஊழியர்கள்.
யாழ். இந்துக்கல்லூரி.

(சி/4598)

---

# 31ஆம் நாள் இதய அஞ்சலி

கடந்த 21-07-98 இல் இறைவனடி சேர்ந்த

திருமதி

## உதாரணி உதயச்சந்திரன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வொ. பொன்னுத்துரை
குடும்பத்தினர்.

சின்னப்பா வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

(சி/4613)

---

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிவக்கொழுந்து கந்ததாசன் B. Sc.**
(ஆசிரியர், க/சரஸ்வதி மகா வித்தியாலயம், புசல்லாவ)
ஆண்டவன் படைப்பில்
25 - 10 - 1957



அமரர்
**நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்**
(பிரதம எழுதுவினைஞர், காணிப் பதிவகம், பருத்தித்துறை)
ஆண்டவன் படைப்பில்
08 - 03 - 1938



அமரர்
**கந்தையா நந்தபாலா**
(தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்)
ஆண்டவன் படைப்பில்
21 - 01 - 1962

அநியாய அழிப்பில் 21 - 08 - 1989

**திதி: 10 - 09 - 1998**

ஓடி மறைந்ததே ஒன்பது ஆண்டுகள் தேடி அலைகின்றோம் உங்களை
சென்ற இடம் தெரியவில்லை சின்னஞ் சிறுவர்கள் நாம்
வாழ்வின் வசந்தங்களையெல்லாம் இழந்து சோகத்தின் நிழலிலே தினமும்
கண்ணீரைத்தான் காண்கின்றோம்! ஆழ்கடலும் ஒருநாள் அமைதியாகலாம்
எங்கள் வாழ்வில் இனியேது அமைதி?
தினமும் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்தி நிற்கும்!

– குடும்பத்தினர்.

'வதனகிரி'
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(58355)

---

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 21

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 5.30 மணி முதல் 7 மணி வரை ஒழுங்கு செய்துள்ள தெய்வீக இசையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை வி. செல்லத்துரையின இசைக்கச்சேரி இடம் பெறவுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும். (ஐ-8-30)

★ ★ ★

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு சி. வை. நித்தியானந்தசர்மா முத்துவிநாயகர் ஆலயத்தில் மாலை 5.15 மணிக்கு நிகழ்த்தி வரும் தெய்வீக இசைச்சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை 'கும்பகர்ணன்' என்ற தலைப்பில் பிரசங்கம் நடைபெறும்.

(ஐ-8-4-30)

★ ★ ★

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு வடபிராந்திய இந்துப் பேரவையின் ஆதரவில் காரை. த. சிவராஜசர்மா நிகழ்த்தி வரும் 'மகாபாரத முத்துக்கள்' எனும் தெய்வீகச் சொற்பொழிவில் இன்று வெள்ளிக்கிழமை 'அபிமன்யு வதம்' எனும் தலைப்பில் பிரசங்கம் நடைபெறும்.

(ஐ-8-30)

## யுவதி காயம்

கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்த வேளை துலா திடீரென விழுந்ததால் யுவதி ஒருவர் தலையில் படுகாயமடைந்தார். ஆனைக்கோட்டை முருகமூர்த்தி கோவிலடிப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மரியதாஸ் மதிவதனி (வயது 17) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அரசியல் ஒழுக்கம்

சர்வதேச மட்டத்தில் இப்போதைய பரபரப்பான செய்தி அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் பற்றியதாகும். வெள்ளை மாளிகையில் முன்னர் பணிபுரிந்த மொனிக்கா லீவின்சிக்குடன் பாலியல் ரீதியாக தகாத முறையில் நடந்து கொண்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஒப்புக் கொண்டதால் அவரது பதவி என்னாகும் என்ற கேள்வியும் கூடவே எழுந்துள்ளது.

அமெரிக்க மக்கள் தங்கள் நாட்டின் தலைவன் ஒழுக்கமுள்ளவனாக இருக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்கள்.

பாலியல் விவகாரத்துக்கு மேலதிகமாக, மொனிக்காவுடன் தமக்குத் தொடர்பு இருந்ததில்லை என்று முன்னர் பொய் கூறியும், அந்த உறவை வெளிச் சொல்ல வேண்டாம் என்று தடுத்தும் கிளின்டன் குற்றம் இழைத்துள்ளார்.

அதனால் அவர் அமெரிக்க மக்களின் பார்வையில் ஒழுக்கமற்றவராகவும் குற்றம் இழைத்தவராகவுமே காட்சியளிக்கிறார். இதன் பின்னரும் அவர் அமெரிக்க நாட்டின் தலைவராக நீடிப்பதை அந்நாட்டு மக்கள் விரும்ப மாட்டார்கள்.

அதனால் ஜனாதிபதி கிளின்டனுக்கு எதிராக அரசியல் குற்றவியல் பிரேரணை (இப்பீச் மென்ட்) கொண்டு வரப்படுவது தவிர்க்க முடியாதது என்ற நிலை வந்துள்ளது.

அமெரிக்க நாட்டின் அரசியல்சரித்திரத்தில் ஊழல், மோசடி, தவறான நடத்தை என்பன குறித்து எந்த ஒ ஜனாதிபதி மீதும் அரசியல் குற்றவியல் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அதனால் பில் கிளின்டன் தமக்கு எதிரான பிரேரணை கொண்டு வருவதற்கு முன்னரே பதவியை ராஜினாமாச் செய்து விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியலில் ஈடுபடுபவர்கள் ஊழல், மோசடி ஆகிய செயல்களில் ஈடுபடாத நேர்மையாளராக இருக்க வேண்டும் என்றே எந்த நாட்டு மக்களும் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக, தமக்குக் கிடைத்த அதிகாரத்தையும், அந்தஸ்தையும் பயன்படுத்தி அந்தக் குற்றங்களில் ஈடுபடுவதே அரசியல் தலைவர்களின் வழக்கமாகிவிட்டது.

இந்த விடயத்தில் எங்கள் நாட்டு அரசியல் தலைவர்களும் சுத்தமானவர்கள் என்று துணிந்து கூறுவதற்கில்லை. அரசியல் தலைவர்களின் குற்றங்கள் பல இந்நாட்டில் வெளியே வருவதில்லை; வெளியே வரவிடாமல் மறைக்கப்பட்டு விடுகின்றன.

இந்தியாவில் அரசியல் தலைவர்கள் பெரியவர்களும், சிறியவர்களும் அடிக்கடி நீதிமன்றம் ஏறுகிறார்கள். எங்கள் நாட்டில் அதுவும் குறைவு.

அரசியல் தலைவர்கள் ஒழுக்கமானவர்களாக, நேர்மையானவர்களாக இருக்கிறார்களா என்பதனைச் சுயேச்சையாகக் கண்டறியும் அதிகாரம் உள்ள அமைப்பு ஒன்று தேவை. அது குறித்துச் சிந்திக்க வேண்டிய காலம் இன்னும் பிந்தவில்லை.

# குண்டு வீசாதீர் எனக் கோரியபோதும் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது

## 'பிரின்ஸஸ் காஷ்' கப்டன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கப்பல் நிறுத்தப்பட்டிருந்த சமயம் அதன் மீது குண்டு வீச வேண்டாம் என நான் எனது தொலைத் தொடர்புக் கருவி மூலம் கோரினேன். ஆனால் குண்டு வீசப்பட்டது. கப்பல் எரிவதைப் பார்த்து நான் கண்ணீர்விட்டு அழுதேன்.

'பிரின்ஸஸ் காஷ்' கப்பல் கப்டன் வி. என். காக்ரே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சென்னை புறப்பட முன்னர் அவர் இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'எனது கப்பல் பாதை மாறிப் போனதாக கூறுவது பொய்யான விடயம். இலங்கைக் கடற்படையினர் தெரிவித்த பாதையிலேயே நாம் சென்றோம்.

கடந்த 13 ஆம் திகதிஇரவு நாம் பருத்தித்துறையை அடைந்து விட்டோம். அங்கு படகுகளில் வந்த விடுதலைப் புலிகள் கப்பலுக்குள் ஏறி எம்மை விசாரித்தனர். பின்னர் அவர்கள் கப்பலை முல்லைத்தீவுக்குக் கொண்டு போனார்கள்.

ஸ்ரீலங்கா விமானப்படை குண்டுபோட முயன்றபோது நாம் 'றேடியோ' மூலம் குண்டு போட வேண்டாம் என்று கூறினோம். அச்சமயம் கப்பலிலேயே நாம் இருந்தோம்.

குண்டு போடத் தயாரானதும் நாம் அவசர அவசரமாக கரைக்குச் சேர்க்கப்பட்டோம். கரையில் நின்று பார்த்தபோது கப்பல் எரிந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்து அழுதுவிட்டேன்.

முதலில் புலிகள் எம்மை ஒரு மாதிரி நடத்தினர். நாம் இந்திய மாலுமிகள் என்பது தெரியவந்ததும் நன்றாகப் பராமரித்தனர் — என்றார்.

(ஐ-6-3)

## பாடசாலையில் இருந்த 'சென்றி' அகற்றப்பட்டது

பருத்தித்துறை, ஓக. 21

புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் அமைந்திருந்த சோதனைச்சாவடி பாடசாலை அபிவிருத்திச் சபையினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு சற்றுத் தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்து புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் இயங்கி வரும் இப் பாடசாலையை மீண்டும் அதே இடத்தில் இயங்க வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பாடசாலை வளவில் புதையுண்டு இருக்கலாம் என நம்பப்படும் கண்ணிவெடிகள் பாடசாலையை ஊடறுத்துச் செல்லும் பாதுகாப்பு அரண் ஆகியவற்றை அப்புறப்படுத்தித் தருவதற்கு பாதுகாப்புப் படையினர் சம்மதம் தெரிவித்துள்ளனர். கடந்த கால வன்செயல்களினால் மிக மோசமாக சேதமடைந்த இப்பாடசாலைக் கட்டடங்களைத் திருத்துவதற்கு நிதி உதவி அளிக்குமாறு பாடசாலை அபிவிருத்திச் சபை கோட்டக்கல்வி அதிகாரி ஊடாக யாழ். வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளரைக் கேட்டுள்ளது.

(ஐ-118-173)

## கைவிட்ட குழந்தையை தாயார் பொறுப்பேற்றார்

யாழ். கந்தர்மடம் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி அநாதரவாக காணப்பட்ட ஆண் குழந்தையை அதன் தாயார் பொறுப்பேற்றுள்ளார்.

அநாதரவாகக் கிடந்த இக் குழந்தை இராணுவத்தினரின் உதவியுடன் அயலவர்களால் மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

தலைமறைவாகியிருந்த தாயாரைக் தேடிக் கண்டு பிடிக்க விசாரணை நடத்தி வந்த பொலீஸார் நயினாதீவுப் பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப தாயை கைது செய்தனர்.

பொலீஸாரினால் கடந்த செவ்வாயன்று அவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரப்பட்டபோது அவர் தனதுகுழந்தையைப்பொறுப்பேற்றார்.

தொடர்ந்து விசாரணை நடைபெறுவதால் அக் குழந்தை நிறை குறைந்த குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திலேயே பேணப்பட்டு வருகிறது.

(ஐ-15-139-173)

## பெண் மரணம்

நெல்லியடி, ஓக. 21

உடலில் தீமூட்டி எரிகாயங்களுக்கு இலக்கான இளம் பெண் ஒருவர் மந்திகை மருத்துவமனையில் புதன்று காலை மரணமானார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தனது உடலில் தீமூட்டியவரான தம்பசிட்டி சாளம்பையைச் சேர்ந்த செல்வி கந்தசாமி ஜெயமணி (வயது 32) என்பவரே மரணமடைந்துள்ளார்.

மந்திகை மருத்துவமனையில் மரணவிசாரணையை பருத்தித்துறை மாவட்டபதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் மேற்கொண்டு சடலத்தை உறவினரிடம் கையளித்தார்.

(ஐ-109-173)

## ஆலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீமுத்துமாரியம்பாள் ஆலய மூலஸ்தானத்தை புனர் நிர்மாணம் செய்து மஹா கும்பாபிஷேகம் நடத்துவதற்கு ஆலய மகாசபை தீர்மானித்துள்ளது.

இத் தீர்மானத்தைத் தொடர்ந்து ஆலய பாலஸ்தாபனம் இம்மாதம் நடைபெறவுள்ளது.

புனர் நிர்மாணத்திற்கு 25 லட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-5)

## ஆசிரியர் இன்றி மாணவர் பாதிப்பு

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில்அதிபர் மற்றும் ஒருஆசிரியர் ஆகியஇருவருமே கடமையாற்றுவதால் இவ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகபெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சங்கீத ஆசிரியை தவிர வேறு பாடங்கள் போதிக்கக் கூடிய ஆசிரியர்கள் இல்லாததால் ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் - ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் பாடசாலைக்குச்செல்வதை குறைத்துக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)


கலைஞர் ...

## தெள்ளுதமிழ்க் காவலனே!


தெள்ளுதமிழ்க் காவலனே தேவர் குலம் மீட்டவனே
கள்ளமிலா வெள்ளையுளத் தொண்டர்களைக் காப்பவனே
எள்ளளவும் நின் சிந்தை என்றுமிலா மக்களையும்
கொள்ளை கொண்டு நின்னருளை அளித்திடுவாய் குகநேசா

மு. க. சிவானந்தம்


### உதய வாக்கு

ஒருபோதும் போராடாமலே இருப்பதைவிட போராடித் தோற்பதே மேல்

—ஆர்தர்க்லௌ



## ஒருநொடியில் வந்திடர் களைந்திடாய்

ஈசனே நல்லை வாசனே கதிரேசனே முருகேசனே
குஞ்சரி தெய்வானை வந்தடி தொழு குகனே
நற்றவர் அங்கனே சற்குருவே நீ தஞ்சம்
ஓடியெம் மனது உழலுதே
ஒரு நொடியில் வந்திடர் களைந்திடாய்.

- யோகர் சுவாமிகள்

## கால்நடை வளர்ப்போர் பாதிப்பு

உரும்பிராய், ஓக. 21

உரும்பிராய் பிரதேசத்தில் அரசாங்க கால்நடை வைத்திய நிலையம் எதுவும் இயங்காததனால் மாடு, ஆடு முதலியவற்றை வளர்ப்போர் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பாற்சாலை ஒன்று உரும்பிராய்ச்சந்தியில்இயங்குகிறது. இந்த வசதியைப் பயன்படுத்திப் பெருமளவிலான மக்கள் மாடு வளர்ப்பில் ஈடுபட்டுத் தமதுபாலை இங்குவிற்பனை செய்து வருகின்றனர்.

இதே நேரத்தில் இம்மாடுகளுக்குச் சுகயீனம் ஏற்பட்டால் உடன் சிகிச்சையளிக்க முடியாத நிலை உள்ளது. கோப்பாய் பிரிவிற்கு ஒரு கால்நடை வைத்திய நிலையம் உள்ள போதிலும் அது நீர்வேலியிலேயே இயங்குகிறது.

(ஐ-154)

## கடற்கரை வீதி புனரமைப்பு

மூளாய், ஓக. 21

பொன்னாலைக்கும்—பருத்தித்துறைக்கும் இடையிலான கடற்கரை வீதி திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

பல மைல்கள் நீளமான இவ் வீதியை திருத்தம் செய்யும் நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் இவ் வீதி பொது மக்களின் பாவனைக்கு முற்றாக தடைசெய்யப்பட்டிருக்கிறது. பாதுகாப்புப் படையினரே இவ் வீதியைப் பயன்படுத்துகின்றனர்.

(ஐ-99)

## கடற்றொழிலாளர் கூ. சங்கங்கள் அமைப்பு

நெல்லியடி, ஓக. 21

வடமராட்சி கிழக்கில் பதின்மூன்று கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

மணற்காடு, குடத்தனை வடக்கு, குடத்தனை கிழக்கு, பொற்பதி, நாகர்கோயில் கிழக்கு, நாகர்கோயில் மேற்கு, மாமுனை, ஆழியவளை, செம்பியன்பற்று, வெற்றிலைக்கேணி, வத்திராயன், தாளையடி, உடுத்துறை ஆகிய பகுதிகளிலேயே கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை —

இப்பகுதியில் புதிதாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை கடற்றொழில் பரிசோதகர் மேற்கொண்டு வருகின்றார்.

(ஐ-109)

## குளம் திருத்தம்

கரவெட்டி கிழக்கு தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத்திற்கருகிலுள்ள குளம் ஒன்றேகால் இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-109)

### நாளை

ஆவணி - 06

சனிக்கிழமை

திதி: அமாவாசை முற்பகல் 8.00 வரை

நட்சத்திரம்: மகம் பின்இரவு 12.39 வரை.

சுபநேரம்: 03.05 04.35

ராகுகாலம்: 09.05 10.35

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் 11 தபாலகங்களுக்கே தொலைபேசி வசதி கிடைத்துள்ளது

## அஞ்சல் அதிபர் நாயகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஓக; 21

யாழ்; குடாநாட்டில் அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கின்ற ஒன்பது தபாலகங்களைத் தவிர ஏனைய தபாலகங்கள் தற்பொழுது இயங்கி வருகின் 13 அஞ்சல் அலுவலகங்களும், 139 உப அஞ்சல் அலுவலகங்களும் தற்பொழுது இயங்கி வருவதாக வடமாகாண பதில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஆறு அஞ்சல் அலுவலகங்களுக்கும், ஐந்து உப அஞ்சல் அலுவலகங்களுக்கும் தற்பொழுது தொலை பேசி இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்;

யாழ்; குடாவில் 31அஞ்சலகங்களுக்கும், 92 உபஅஞ்சலகங்களுக்கும் முன்னர் தொலைபேசி வசதிகள் இருந்தன, படிப்படியாக ஏனைய தபாலகங்களுக்கும் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படும்— என்றும் அவர் தெரிவித்தார்;

சுண்டுக்குளி, யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, வேலணை, கரவெட்டி, பருத்தித்துறை, திருநெல்வேலிச் சந்தி, யாழ்; பஜார் (நவீன சந்தை), நல்லூர், ஆனைப்பந்தி, புலோலி ஆகிய இடங்களிலுள்ள தபாலகங்களுக்கே தற்பொழுது தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன, (ஐ-5-173)

## கிணறுகள் புனரமைப்பு

நெல்லியடி, ஓக; 21

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் சேதமடைந்திருக்கும் ஐந்து பொதுக் கிணறுகளை புனரமைப்புச் செய்ய அகதிகளுக்கான ஐ; நா; தூதுவராலயம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது;

(ஐ-109)

## ம. எண்ணெய் போதியளவு கையிருப்பில்

அரியாலை, ஓக; 21

யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணெய் போதியளவு கையிருப்பில் இருப்பதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ்; பிராந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்;

யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் முகவர் நிலையங்களுக்கு மண்எண்ணெய் பவுஸர் மூலம் வழங்கப்பட்டு வருவதாகவும் பெற்றோல், டீஸல் என்பனவும் முகவர் விற்பனை நிலையங்களுக்கு வழங்கப் பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்; (ஐ-17)

## மாகாணமட்ட விளையாட்டுப்போட்டி

வலி; வடக்கு, ஓக; 21

வடக்கு—கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான மாகாணமட்டப் போட்டிகள் அடுத்தமாதம் முற்பகுதியில் திருமலையில் நடைபெறவுள்ளன.

முதலில் குழு நிகழ்ச்சிகளான உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிறிக்கெட் ஆகியன முறையே செப்ரெம்பர் 1, 2, 3 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

5 ஆம் 6 ஆம் திகதிகளில் மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெறும்;

மேற்படி போட்டிகளை நடத்த முன்பு ஒருமுறை ஏற்பாடு செய்யப்பட்டபோதிலும் யாழ். மாவட்ட மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்பதற்கு போக்குவரத்து வசதியின்மையால் இப்போட்டிகள் பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது;

ஆனால் அடுத்தமாத முற்பகுதியில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டபோதிலும் போக்குவரத்து வசதி பற்றி எவ்வித அறிவுறுத்தலும் வழங்கப்படவில்லை எனத்தெரிய வருகிறது;

(ஐ-86)

---

## ஈராண்டு நினைவஞ்சலி



செல்வி

### செல்வரத்தினம் றஜனி

(யாழ்·இந்து மகளிர் கல்லூரி A/L 1995 வர்த்தகப்பிரிவு)

மலர்வு 19 – 10 – 1976

உதிர்வு 21 – 08 – 1996

அன்பு மகளே றஜனி நீ
இறைவனடி சேர்ந்து
இன்றுடன் ஈராண்டாகிறது!
எமது இரு விழியும் தூங்கவில்லை
உமை நினைத்து நினைத்து
எமது உள்ளம் இருளாகிவிட்டதம்மா!
ஊர் போற்ற வாழ்ந்த பெயர் பெற்ற
உன்னை எண்ணியெண்ணி
நாம் செய்வதறியாது திணறுகிறோம்!
தவிக்கிறோம்!
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
உம் நினைவு எம்மை விட்டகலாது!

என்றும் உமது சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

பாசத்துடனும் கவலையுடனும் உமை என்றும் நினைவு கூருகின்றோம்;

பிரிவால் துயருறும்;
இ. செல்வரத்தினம், செ. மங்கையர்க்கரசி,
செ. றஜனிகாந், செ. றஜனிதரன்,
செ. தர்சினி.

இல; 50,5 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்;

(58485)

---

## ஈராண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 21 — 03 — 1978



காலன் பிடியில் 15 — 09 — 1996

### சந்திரசேகரம் சந்திரகாந்தன்

(மகாஜனாக் கல்லூரி மாணவன்)

எங்கள் அன்புச் செல்வமே பாசமுள்ள காந்தா! உம்மை உயிரோடு பார்க்க முடியாமல் படமாகப் பார்த்து பரிதவிக்கும் அம்மாவைப் பார்க்க நீர் இங்கே இல்லை காந்தா! ஈராண்டு சென்றாலும் உமது வண்ணமுகமும் பண்பான நற்குணமும் அன்பான வார்த்தைகளும் எங்களை விட்டு என்றும் அகலாது! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

அன்பு அம்மா, அண்ணாமார்,
அம்மம்மா, மாமாமார், மாமிமார்,
மைத்துனர்கள், சித்தப்பா, சித்தி,
உடன் பிறவா சகோதரர்கள்,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

பன்னாலை, தெல்லிப்பழை.
தற்காலிக விலாசம்:
இளவாலை வடக்கு;

(58497)

---

உ

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை (இலங்கை)

# மஹோற்சவவிஞ்ஞாபனம் 1998

24-08 98 முதல் 04-09 98 வரை

### பிரதான உற்சவங்கள்

கொடியேற்றம்: ஆவணி எட்டாம் நாள்
24-08-98 திங்கட்கிழமை மு.ப. 11.00 மணி

வேட்டைத்திருவிழா: ஆவணி பதினாறாம் நாள்
01-09-98 செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணி

சப்பறத்திருவிழா: ஆவணி பதினேழாம் நாள்
02-09-98 புதன்கிழமை பி.ப. 3.00 மணி

தேர்த்திருவிழா: ஆவணி பதினெட்டாம் நாள்
03-09-98 வியாழக்கிழமை காலை 9.00 மணி

தீர்த்தத்திருவிழா: ஆவணிஓணம் கொடியிறக்கம் ] ஆவணி பத்தொன்பதாம்நாள் 04-09-98 வெள்ளிக்கிழமை காலை 8 00 மணி தீர்த்தம்

### முக்கிய குறிப்புகள்

1; கொடியேற்றம், கொடியிறக்கம் பொது உபயமாக நடைபெறுவது வழக்கமாகையால் இவ்வுபயத்திற்கு அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் நிதி அலுவலகத்தில் பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்;

2; பணமாகவோ, பவுணாகவோ, அரிசி முதலிய அன்னதானப் பொருள்களாகவோ அல்லது பூசை உபகரணங்களாகவோ அன்பளிப்புச் செய்வோர் அனைவரும் நிதி அலுவலகத்தில் பதிவு செய்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும்; கோயில் நிர்வாகம் தவிர்ந்த எவருக்கும் கோயில் பேரில் அன்பளிப்புப் பெற அனுமதி வழங்கப்படவில்லை; எந்த அன்பளிப்பும் கோயில் அலுவலகத்திலேயே செலுத்தப்பட வேண்டும்; அல்லது கடித மூலமோ, வங்கி மூலமோ கோயிலுக்கு அனுப்பப்பட வேண்டும்;

3; கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், அடி அழித்தல், பிரதிட்டை பண்ணல் யாவும் வெளி வீதியில் நடைபெறுதல் வேண்டும்; திருவிழாக் காலத்தில் பொங்கிப் படைத்தல், நேர்த்தி, திருமணம், தனிப்பட்டவர் அபிஷேகம் ஆகியவை இடம்பெறாது என்பதை அறியத் தருகிறோம்;

4; பெண்களும், குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் கூடியளவு குறைத்துக் கொள்ள வேண்டும்;

5. சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு முரணான உடைகள் அணிந்து வருவது தவிர்க்கப்பட வேண்டும்;

6; கோயிற் தரிசனம் முடிந்தவுடன் அவரவர் தத்தம் இல்லங்களுக்குச் சென்று விடுவது விரும்பத்தக்கது; இரவு நேரங்களில் எவரும் கோயில் வீதிகளில் தங்குவதோ, பொழுது போக்குவதோ தவிர்க்கப்பட வேண்டும்;

7; மஹோற்சவ காலம் பன்னிரண்டு தினங்களும் பகல் 12;30 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்;

### கோயிற் கணக்கு உள்ள வங்கிகள்

இலங்கை வங்கி சுன்னாகம் கணக்கு
இலக்கம்: 3155

வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் கணக்கு
இலக்கம்: 12692

பம்பலப்பிட்டி இலங்கை வங்கி கணக்கு
இலக்கம்: 0370210586

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

18—07—1998

(சி/ 4587)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் ஆலய புனர்நிர்மாண பணிகள் வியாழனன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக. 21

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் புனருத்தாரண வேலைகள் எதிர்வரும் வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

ஆலயத்தின் நிர்மாண வேலைகள் முற்றிலும் ஆகம சாஸ்திரங்களுக்கு அமையவும், வேதசிவாகமங்களுக்கு இணங்கவும் செய்யப்படும் என்று மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து. சண்முகநாதக் குருக்கள் உதயனுக்குத் தெரிவித்தார்.

போர்க் காலத்தின் போது சேதமடைந்த, சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த ஆலயத்தைபுனர்நிர்மாணம் செய்வதற்கென்று அரசாங்கம் நாற்பது லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது.

எனினும் காணாமற்போன உற்சவமூர்த்திகள், வெள்ளிக் கொடித்தம்பம், வாகனம், தேர், சப்பறம் ஏனைய தளபாடங்களைச் செய்வதற்கு அரசாங்க உதவிப் பணம் பயன்படுத்தப்படமாட்டாது. கந்தன் அடியார்களின் நன்கொடைகள் மூலமே நிர்மாணிக்கப்படும் என்றும் —

ஆலய புனர் நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்கு புனர் நிர்மாணக் குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளதாகவும் — ஆதீனகர்த்தா மேலும் தெரிவித்தார்.

புனர்நிர்மாணக் குழுவின் தலைவராக ஆதீனகர்த்தா மஹாராஜ ஸ்ரீ சண்முகநாதக் குருக்களும், செயலாளராக பிறப்புப் பதிவாளர் வி. சண்முகநாதனும் நியமிக்கப்பட்டுள்ளனர். புனர்நிர்மாணக் குழுவில் மொத்தம் 14 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

நிர்மாண வேலைகள் கட்டடக் கலைஞர் திருமதி மல்லிகா இராசரத்தினத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணன் ஆலோசகராகப் பணிபுரிவார். (அ)

## பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

வடமராட்சி, ஒக. 21

புலோலி மேற்கு வததளை மழலைகள் பூங்கா பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை நடைபெற உள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எம். தர்மலிங்கம் தலைமையில் நடைபெறஉள்ளது இப்போட்டியில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமியும், சிறப்பு விருந்தினராக யாழ். செயலக வடக்கு—கிழக்கு மாகாண இணைப்பாளர் எஸ். வீரபத்திரபிள்ளையும் கலந்து கொள்ள உள்ளனர். (இ-173-9)

## முள்ளியவளையில் நோயாளர் அதிகரிப்பு

### பலருக்கு காய்ச்சல் சிரங்கு

வவுனியா ஒக. 21

முள்ளியவளை மத்திய மருந்தகம் மற்றும் பிரவச விடுதி ஆகியவற்றில் கடந்த மாதம் 5ஆயிரத்து383 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பெரும்பலானோர் மலேரியாக் காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம், சாதாரண காய்ச்சல் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டவர்கள் எனவும்—

நூற்றுக்கு மேற்பட்டோர் தற்போது வன்னிப் பகுதியில் பரவிவரும் சொறி, சிரங்கினால் பாதிக்கப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை போஷாக்கின்மை காரணமாக கடந்த மாதம் மட்டும் நான்கு குழந்தைகள் இறந்து பிறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 41 குடும்பங்களுக்கு நல்லின ஆடுகள்

### பலகல்ல வழங்கினார்

யாழ்ப்பாணம், ஒக. 21

ஈவினை, புன்னாலைக்கட்டுவன் கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 41 குடும்பங்களுக்குப் பலாலி இராணுவ தலைமையகத்தில் வைத்து நல்லின ஆடுகள் வழங்கப்பட்டன.

அச்செழு 511 பிரிகேட் பிரிகேடியர் மொகான் றொக்வூட்டின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடபகுதி படைத்தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல கலந்துகொண்டு குறிப்பிட்ட குடும்பங்களுக்கு ஆடுகளை வழங்கினார்.

இந்த வைபவத்தில் ஈவினைகிரமாசேவை உத்தியோகத்தர் வே. சம்பந்தநாதன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு கிராமசேவை உத்தியோகத்தர் சி லம்போதரன், புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராமசேவை உத்தியோகத்தர் சு. சிவதாசன், ஈவினை விவசாய சம்மேளன செயலாளர் பொ. ஐயாத்துரை, பொருளாளர் த. சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த வைபவத்தில் கலந்து கொண்டவர்களுக்குப் பலாலி இராணுவத் தலைமையகத்தினால் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

ஈவினைக் கிராமத்தில் வறுமைக்கோட்டில் வாழும் மக்களுக்கு 60 வீடுகள் ஈவினையில் கட்டப்படவுள்ளதாகவும் தற்பொழுது 5 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வைபவத்துக்குத் தலைமை வகித்த பிரிகேடியர் மொகான் றொக்வூட் தெரிவித்தார்.

இந்த வீடுகள் அடுத்த சில மாதங்களில் மக்களிடம் கையளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அச்செழு பிரிகேட்டைச் சேர்ந்த கேணல் சேனநாயக்கா இந்த நிகழ்ச்சிக்கான முழு ஏற்பாட்டையும் செய்திருந்தார். (இ-5)

## சிமெந்தினால் ஏற்படும் புழுதியால் நகைத் தொழில் பாதிப்பு என முறையீடு

யாழ்ப்பாணம், ஒக.21

யாழ். கன்னாதிட்டிச் சந்தியிலுள்ள சிமெந்துக் கூட்டுத்தாபனக் களஞ்சியத்தில் இருந்து சிமெந்தினை இடமாற்றம் செய்யும்போது ஏற்படும் புழுதியினால் நாம் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளோம். இதற்கு உரிய நடவடிக்கையினை உடனடியாக எடுக்க வேண்டும். அல்லது நாம் மறியல் போராட்டத்தில் ஈடுபட வேண்டி ஏற்படும்.

கன்னாதிட்டி நகைக் கடை உரிமையாளர்களும் ஊழியர்களும் யாழ். மாநகர மேயருக்கு யாழ். வணிகர் சழகம் ஊடாக அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிமெந்துக் கூட்டுத்தாபன களஞ்சியத்திலிருந்து சிமெந்தினை இடமாற்றம் செய்யும் போது அதிகளவான புழுதி வெளியேறுகின்றது. இந்தப் புழுதி நகைகளை நிறுக்கும் தராசுகளில் படிவதனால் நிறைகளைச் சரியாக கணிப்பிட முடியாமலுள்ளது. அதே சமயம் காட்சிக்கு வைத்துள்ள நகைகளிலும் இப்புழுதி படிவதனால் நகைகள் பொலிவு இழந்து விடுகின்றன.

அதுமட்டுமன்றி இப்பகுதியிலுள்ள ஊழியர்களும் உரிமையாளர்களும் நெஞ்சடைப்பு, இருமல், ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு ஆளாக வேண்டிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இவை தொடர்பாக நாம் பல முறை சிமெந்து கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியும் அவர்கள் இது தொடர்பாக நடவடிகைகை எடுப்பதாகத் தெரியவில்லை. தாங்கள் தலையிட்டு இதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். அவ்வாறு தங்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் நாம் எமது கடைகளைப் பூட்டி மறியல் போராட்டம் ஒன்றை நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

எனவே உரிய நடவடிக்கையினைத் தாங்கள் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5-9)

## வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ். வை. எம். சி. ஏ. அமைப்பின் ஆதரவுடன் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளையும் நாளை மறுதினமும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பத்து அணிகளின் விவரம் வருமாறு— பலைஷுர் சென். அன்ரனீஸ் வி. க, சென். றோக்ஸ் வி. க, அரியாலை ஐக்கிய வி. க, யாழ். பமிலியன்ஸ் வி. க, கரவெட்டி டயமன்ட் வி. க, தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர் வி. க, கொழும்புத்துறை சண்பிளவர் வி. க, புத்தூர் வீனஸ் வி. க, குருநகர் யுத்காமல் வி. க, சங்கானை இளம்பறவை வி. க.

## திருடிய சிறுவர்களை மடக்கிப் பிடித்த சாரணர்

யாழ்ப்பாணம் ஒக. 21

நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியில் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினரால் விற்பனை செய்யப்பட்டு வரும் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களை அபகரித்துச் செல்ல முயன்ற இரு சிறுவர்கள் அங்கு கடமையில் இருந்த சாரணச் சிறுவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

மேற்படி சம்பவம் கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.15 மணியளவில் பருத்தித்துறை வீதி அரசடிச் சந்தியில் உள்ள வீதித்தடை முகாம் பகுதியில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது

விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள் ஆலய வீதியில் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களை விற்பனை செய்து கொண்டிருந்த சமயம் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களை விற்றுத் தருவதாகக் கூறி பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க இரு சிறுவர்கள் அவர்களிடமிருந்து சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டனர்.

பின்னர் சீட்டுக்கள் சிலவற்றை விற்பனை செய்தவுடன், அவற்றுக்கான பணத்தையும் சுருட்டிக்கொண்டு அவ்விடத்தை விட்டு வெளியேற முற்பட்ட வேளையில் அவர்களது செயல்களை அவதானித்த சாரணச் சிறுவர்கள் சம்பந்தப்பட்டவர்களை கையும் மெய்யுமாகப் பிடித்து விசாரணைக்குட்படுத்தினர்.

சாரணர்களால் சிறுவர்கள் விசாரிக்கப்படுவதைப் பார்த்த அரசடி காவலரண் பகுதியில் கடமையில் இருந்த இராணுவ வீரர்களும் மேற்படி சிறுவர்களை விசாரித்ததோடு, இத்தகைய செயல்களில் ஈடுபடக்கூடாது என எச்சரித்தனர்.

பின்னர் மேற்படி சிறுவர்களிடமிருந்து அதிர்ஷ்டலாபச்சீட்டுக்களையும், பணத்தையும் பெற்ற இராணுவ வீரர்கள் விழிப்புலனற்றோர் சங்கப் பிரதிநிதிகளிடம் அவற்றை ஒப்படைத்தனர்.

மேற்படி சிறுவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்த சாரணச்சிறுவர்கள் நல்லூர் சாரணர் சேவைப் பொறுப்பாளரும், உதவி மாவட்ட சாரண ஆணையாளருமான எ. ஏகாம்பரநாதனால் பாராட்டப்பட்டனர். (இ-7)

## தேசிய வீடமைப்பு அதிகார சபை அறவிடவேண்டிய கடன் ரூ. 3 கோடி

யாழ்ப்பாணம், ஒக. 21

யாழ்.மாவட்டத்தில் கடன் பெற்றவர்களிடம் இருந்து தேசிய வீடமைப்பு அதிகார சபை மூன்று கோடி ரூபா கடன் மீளளிப்புச் செய்ய வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1984 ஆம் ஆண்டு பத்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இந்தக் கடன் உதவிகள் வழங்கப்பட்டதாகவும் —

யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாகப் பலர் தாம் பெற்ற கடனை இதுவரையும் மீளளிக்கவில்லை என்றும் — வீடமைப்பு அதிகார சபை அதிகாரி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இக் கடன்களைப் பெற்றவர்களில் பலர் இடம் பெயர்ந்தும், சிலர் இறந்தும் விட்ட போதிலும் ஏனையவர்களிடமிருந்து இக்கடனை மீளளிப்புச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடு வருவதாகவும் அவர் கூறினார்.

ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் நூறு வீடுகள் என்ற திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 926 பேருக்கு வீடமைப்புக் கடன் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் —

தற்பொழுது 470 பேருக்கு வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளது என்றும் —

தொடர்ந்து இக் கடன் உதவு வழங்கப்படும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தேசிய வீடமைப்புத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடன் உதவியில் கடந்த மாதம் மட்டும் 5 லட்சம் ரூபா மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## சங்கானை ஆஸ்பத்திரி புனரமைப்பு

மூளாய், ஒக. 21

சங்கானை அரசினர் வைத்தியசாலைஅபிவிருத்தி செய்யப்பட விருக்கிறது. இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி வைத்திய சாலையை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைகள் பல்வேறு மட்டங்களில் இருந்தும் பெறப்படவுள்ளன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் இவ்வைத்தியசாலையின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்ய பட்டுள்ளது. (ஐ-99)

## வலி. மேற்கில்

## 5, 676 குடும்பங்களுக்கு ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களில் 5 ஆயிரத்து 676 குடும்பங்களுக்கு இதுவரை மீளக்குடியமர்வுக்கான கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட மேலும் 3 ஆயிரத்து 690 குடும்பங்களுககு மிக விரைவில் மீளக் குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்படும்.

மேற்படி தகவல்களைப் பிரதேச செயலர் கா. சந்திரராசா தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து தங்கியுள்ள குடும்பங்களுக்கும் மீளகுடியமர்வு கொடுப்பனவு வழங்குவதற்குரிய வேலைகள் துரிதமாக நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவின் நிரந்தர குடும்பங்கள் மீளக்குடியமர்வு கொடுப்பனவுக்குஇது வரை பதிவு செய்யாமல் இருந்தால் தமது கிராம உத்தியோகத்தரிடம் சென்று பதிவு செய்துகொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு ஒன்று ஏற்பட இலங்கைக்கு இந்தியா அழுத்தம் தர வேண்டும்

## பாரதீய ஜனதா தலைவர்களிடம் ரெலோ தூதுக்குழு கோரிக்கை

கொழும்பு, ஓக. 21

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிட்டு, தீர்வு ஒன்று ஏற்பட அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ரெலோ அமைப்பின் தூதுக்குழு ஒன்று மேற்கண்டவாறு தமிழகத்தில் உள்ள பாரதீய ஜனதாத் தலைவர்களிடம் கோரியுள்ளது.

அண்மையில் தமிழகம் சென்று இருந்த ரெலோ அமைப்பின் முதல்வர் என். கே. சிவாஜிலிங்கம், அதன் தலைவர் என். விநோதலிங்கம், தமிழகத்தில் தங்கியிருந்த அந்த அமைப்பின் முன்னாள் செயலதிபர் அடைக்கலநாதன் (செல்வம்) ஆகியோர் அடங்கிய குழு பராதீய ஜனதாக் கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவர்களைச் சந்தித்தது.

''இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு அவசியம் இந்தியா தலையிடா விட்டால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது. ஆகவே இந்தியஅரசு இந்த விவகாரத்தில் தலையிட வேண்டும் அதற்காக தமிழக தலைவர்கள் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்'' என்று தூதுக் குழு கேட்டுக் கொண்டது.

ரெலோ அமைப்பின் தூதுக் குழு ஒன்று விரைவில் டில்லி சென்று பேச்சு நடத்த விருப்பதாக ரெலோ பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

(இ-3)

## பால்மா உணவு முத்திரை

தென்மராட்சி, ஓக 21

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள தாய்மார்களுக்கான விசேட பால்மா உணவு முத்திரைகள் அந்தந்த கிராம அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

1997 ஜூலை முதலாந் திகதிக்கு பின்னர் பிறந்த குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்களை சமர்ப்பித்து விசேட உணவு முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

[இ-117]

## சிறுவர் பாதுகாப்புச் சட்ட மூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது

கொழும்பு, ஓக. 21

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பது தொடர்பான சிறுவர் பாதுகாப்புச் சட்ட மூலம் ஒன்று நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து ஆராயவும், அதனை தடுக்கவும் எனப் பூரண அதிகாரமுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஒன்றை அமைக்கும் நோக்குடனேயே இச் சட்ட மூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக பல தரப்பட்ட நிறுவனங்கள் இதுவரை காலமும் செயற்பட்டுவந்த போதிலும், அவற்றை ஒருங்கிணைப்பதற்கு அதிகாரம் மிக்க நிறுவனம் எதுவும் இருக்கவில்லை.

புதிதாக ஆரம்பிக்கப்படும் இந்த அதிகார சபை குறைபாடுகளை நீக்கி சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து விசாரிக்க உரிய நடவடிக்கை எடுக்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

நீதி அரசமைப்பு இன விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மேற்படி சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

புதிதாக உருவாக்கப்படும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் இயங்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

### நிவாரண உதவி கிடைக்கவில்லை

நெல்லியடி, ஓக. 21

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழுள்ள டிப்போக்களில் பணிபுரிந்து, 1990 ஆம் ஆண்டிலிருந்து, தொழில் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு இதுவரை எதுவித நிவாரண உதவியும் வழங்கப்படவில்லை.

கோண்டாவில், பருத்தித்துறை, முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி போன்ற டிப்போக்களைச் சேர்ந்த சுமார் 30க்கு மேற்பட்ட ஊழியர்கள் இவ்விதம் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-109)

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்)

மாகாண சபைத் தேர்தல்களை அரசாங்கம் ஒத்திவைத்தமையும் —

அதை எதிர்த்து ஐ. தே. கட்சி, ஜே. வி. பி ஆகியன எதிர்ப் பிரச்சாரங்களில் ஈடுபட்டிருப்பதும் — தெரிந்தவையே.

இந்நிலையில் அரசாங்கம் ஜனாதிபதி தேர்தலை வருட இறுதிக்குள் நடத்த முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

### ஈ. பி. டி. பி...

(முதலாம் பக்கத் தொடர்)

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நிவாரண வெட்டு, செம்மணி புதைகுழி விவகாரம், ''பிரின்ஸஸ் காஷ்'' கப்பலில் பொருள்கள் ஏற்றிய வர்த்தகர்களுக்கு நஷ்டஈடு பெற்றுக்கொடுத்தல் ஆகிய விடயங்கள் இந்தச் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-3)

### பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்)

மாநகர ஆணையாளருடன் யாழ். செயலகத்துக்கு விஜயம்செய்து செயலக அதிகாரிகளையும் பிரிட்டிஷ் தூதர் சந்தித்து உரையாடினார்.

### ''தசபல...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒட்டோ, பொலீஸ் சீருடைகள், வெடிமருந்து ஆகியவற்றை படையினர் கைப்பற்றியதாகவும் —

படையினர் நடத்திய எதிர்த்தாக்குதல்களில் 8 விடுதலைப் புலிகள் வரை இறந்திருப்பதாக படையினரால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டிருப்பு, வவுணதீவு பாலங்கள் வழியாகவும் மண்முனை வாவியூடாகவும் செவ்வாய் நள்ளிரவு '' தசபல '' ராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே.

(இ-21)

### பக்தி பூர்வமாக...

மித்தநும் ஸ்ரீலங்கா விமானப் படையின் ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப் பறந்து மூன்று தடவைகள் தேரை நோக்கி பல வர்ண மலர்களைத் தூவியது.

தேர்த்திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்களில் பெரும் எண்ணிக்கையானோர் அங்கப் பிரதட்சணம் செய்தும், அடிஅழித்தும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்த பறவைக்காவடிப் பக்தர்களும், பஜனைக் குழுவினரும், பாதயாத்திரைக் குழுவினரும் பக்தி சிரத்தையுடன் நேற்றைய தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது தமிழ் சேவையில் நல்லைக் கந்தனின் தேர்த்திருவிழாவை நேரடி ஒலிபரப்பு செய்தது. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் தேர்த் திருவிழாவை ஒளிபரப்புக்கெனப் பதிவுசெய்தனர்.

தேர்த்திருவிழாவுக்கான விசேட போக்குவரத்து ஏற்பாடுகளை வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை செய்திருந்தது.

ஆலய வீதிகளில் சாரணர்களும், சென் ஜோண்ஸ் அம்புலன்ஸ் படையினரும், மக்கள் நலன்புரிக்கழகத்தொண்டர்களும், இந்துப்பேரவைத் தொண்டர்களும் பொதுச் சேவைகளில் ஈடுபட்டிருந்ததுடன், முதலுதவிச் சிகிச்சைகளையும் மேற்கொண்டனர்.

தீர்த்தத்திருவிழா இன்று காலை 6 மணிக்கு வசந்தமண்டபப் பூசையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து இடம் [illegible] விழா பிற்பகல் 4 மணிக்கு இடம் பெறும்.

(இ-7-5-15-17-139-31)

## தேர்உற்சவ நாளில்

## திருட்டு, ஒழுக்கக்கேடு பற்றி முறைப்பாடு இல்லை

### மோகனதாஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

நேற்று நடைபெற்ற நல்லூர் ஆலய தேர்உற்சவத்தில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகவோ அல்லது ஒழுக்கக் கேடான சம்பவங்கள் தொடர்பாகவோ பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்படவில்லை என யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். மோகனதாஸ் உதயனுக்குத் தெரிவித்தார்.

தேர்த் திருவிழா அன்று அதிக பக்தர்கள் கூட்டம் இருப்பதால் திருடர்களின் அபாயம் ஏற்பலாம் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் பொலீஸசாரின் கண்காணிப்பு நடவடிக்கை பக்தர்களின் அவதானப்போக்கு ஆகியவை காரணமாக திருடர்கள் தமது கைவரிசையைக் காட்ட முடியாமற் போயிருக்கலாம் என நம்பப்படுகிறது.

கடமையில் ஈடுபட்டுள்ள பொலீஸாருக்கு மக்கள் வழங்கிவரும் ஆதரவுக்கு தாம் நன்றி தெரிவிப்பதாகவும்—

தீர்த்த உற்சவமான இன்றும் பக்தர்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் மோகனதாஸ் கேட்டுக் கொண்டார்.

(இ-9)

## கொடுப்பனவு கோரும் கிராம சேவையாளர்கள்

சண்டிலிப்பாய், ஓக. 21

வன்னியிலிருந்து குருநகர் வந்துசேரும் இடம்பெயர்ந்தவர்களை விடுவிக்க அவர்கள் வசிக்கும் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் தங்கள் சொந்த செலவில் இரு தடவைகள் குருநகருக்கு செல்ல வேண்டி இருப்பதாக தெரிய வருகின்றது.

முதலில் பதிவு செய்யவும் பின்னர் விடுவிக்கும் போது கூட்டிவரவும் என்று இரு தடவைகள் குருநகர் முகாமுக்குப் போய்வர வேண்டியிருப்பதாகவும்—

ஆனால் இதற்கான போக்கு வரத்துக் கொடுப்பனவு எதுவும் தமக்கு வழங்கப்படுவதில்லை என்றும் —

கிராம அலுவலர்கள் சிலர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

தமக்கு இதற்கான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்றும் இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(இ-135)

## பன்னவேலைப் பயிற்சி

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் பளை இத்தாவில் கிராம சபை அலுவலக கட்டடத்தில் பன்னவேலை பயிற்சி வகுப்புகள் யாழ். பனை அபிவிருத்திச்சபை பொது முகாமையாளர் எஸ். கோகுலதாஸனால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பளை பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பனை அபிவிருத்திச் சபை அலுவலர் வீ. ஜீ. தங்கவேல், பிரதேச செயலக கிராமியஅபிவிருத்தி அலுவலர் ம. அழகேந்திரன், வேம்பொடுகேணி கிராமிய அபிவிருத்திச்சங்கத் தலைவர் சி. மயில்வாகனம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அகதிகளுக்கான ஐ. நா தூதரக உதவியுடன் பளை செல்வபுரத்தில் பன்னவேலை பயிற்சி வகுப்புகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(இ-117)

## சமசமாஜக் கட்சி நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக. 21

அரசாங்கம் முன்வைத்துள்ள புதிய அரசமைப்பு சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் மெனக் கோரி லங்கா சமசமாஜக் கட்சி நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது.

நேற்றுப் பகல் கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் அமைச்சர் பட்டி வீரக்கோன் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நாட்டில் தற்போது உருவாகியுள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு கட்சிச் சார்பின்றி புதிய அரசியல் சீர்திருத்தத்தை அமுலுக்கு கொண்டு வர அரசுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென சமசமாஜக் கட்சியினர் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு—கிழக்கில் யுத்தம் நடைபெறுகின்ற தெனவும் இது நாட்டின் எதிர் காலத்தைப் பாதிக்கும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

(இ-10-7)

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

தகவல் கிடைத்துள்ளது என்றும்—

அண்மையில் கல்லடிப் பகுதியில் இவ்வாறான பொம்மைக் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான வெடி பொருள்கள் தொடர்பாக எச்சரிக்கையாக இருக்குமாறு பொலீஸார் கேட்டுள்ளனர்.

(இ-9-3)


எமது வீடியோ CD வெளியீடுகள்!

★ ஊர்க்காவலன்
★ அகத்தியர்
★ மைக்கல் மதன காமராஜன்
★ தமிழ்ச் செல்வன்
★ செல்வா

நரேன் வீடியோ சென்ரர்

140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4623)



## இதய பூர்வ அஞ்சலிகள்

நியாய சிரோமணி, சமஸ்கிருத கல்விமான் வித்யா சாகரம்

பிரம்மஸ்ரீ

கி. சுப்பிரம்மண்ய சாஸ்திரிகள்

அவர்களின் ஆத்மா நித்திய சாந்தி பெற எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றேன்.

ஸ்தாபதி ஆறுமுகம் ஜீவரட்ணம்
( ஆச்சாரியார் )
ஆறுமுகம் சிற்பாலயம்

காளிகோவிலடி,
திருநெல்வேலி.

(சி/4527)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org